1984 மார்ச் 13]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தச் சட்டக் கல்லூரியில் படித்தவர்கள். அந்தச் சட்டக் கல்லூரியில் பராமரிப்பு போதவில்லை என்று சொல்லுகிறார்கள். கட்டிடம் பழுதடைந்திருக்கிறது. ஆகவே உடனடியாக தேவையான பராமரிப்பு நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் அந்தச் சட்டக் கல்லூரியில் படிக்கவில்லை. சட்டக் கல்லூரியில் படிக்காமலே பட்டத்தைப் பெற்றிருக்கிறேன். அந்தக் கல்லூரிக்குத் தேவையான வசதிகளைப் பொறுத்த வரையில், அரசு செய்து தரும்.

கடலூரில் நிலத்தடி கழிவுநீர் திட்டம்.

* 87 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கடலூரில் நிலத்தடி கழிவுநீர்த் திட்டம் (Underground drainage) செயல்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Madras City Map.

* 88 Q.—THIRU S. J. SADIQ PASHA : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the Government of Tamil Nadu have approved an aerial survey programme to map the Madras Metropolitan area ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.